# இந்துசாதனம்.

## THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஒரு 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5.00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கூ௫. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி௵ ஆனி௴ ௨ (1924 ஜூன் 16) திங்கட்கிழமை. { இலக்கம்—கூ௫


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிரா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்ருள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.


### புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணா 1
5. தசகாரியம் அணா 5

க. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (…6.)




அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.
25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டு மருந்து கண்காக்ஷியில் பஸ்ட்கிளாஸ்(முதல்தர) தேவஔஷதமென்ன தங்கமெடலும், வைத்தியபதிபட்டமும்பெற்ற

## குரு தாம்பர பஸ்பம்.

முப்புவினுல் தளுக்கா நீற்றியது. களிம்பற்றது. வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது, பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.
பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.
எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். மறுமுறை வியாதி திரும்பிவராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.
சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புகள், கிரந்திகள், பத்துக்கள், கைகால் ரணங்கள், குன்மம், மேகம், பவுந்திரம், கண்டமாலை, சூலைநீர், முதலியன நீங்கும்.
குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும் சரி, அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செம்மேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்கும் கிடைப்பதரிது.
100-வேளை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 20-வேளை ரூ. 10.
ஏழை என்று குபிப்பவர்களுக்கு பாதி விலை. வி. பி. சார்ஜ் வேறு.

வீரியவிர்த்திக்கு நிகரற்ற

## மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது!! ஆச்சரியமான குணமுள்ளது!!
புதிய நலத்தைக் காட்டும் போன பலத்தை மீட்கும்
ஒரு முறை பரீக்ஷிக்கவும்!! அதை இன்றே பார்க்கவும்!!

வீரியவிர்த்திக்கு இது நிகரற்றது. இதற்கு ஈகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, போகசக்திக்குறைவு முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி உண்டாகும். வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையுந் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.
120 குளிகை ரூ. 10. 60 குளிகை ரூ. 5. 30 குளிகை ரூ. 3. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2.
வி. பி. சார்ஜ் வேறு.

திருச்சி கா. பி. மு. இப்ராம்ஸா 3-1-23-ல் எழுதுகிறார்:
தங்கள் மன்மதகோலாகல குளிகையை சாப்பிட்டதில் ரத்தத்தை சுத்திசெய்து நரம்பு தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரிய விருத்தியையும் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3-ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுர்வேத டாக்டர்
**C. மலையப்பசாமி பிள்ளை,**
நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி, S. I.

(Q. (A) 46.)

குளிர்! குளிர்!

## கம்பளிப் போர்வைகள்.

அசல்கம்பளி மிருதுவானது; நீடித்து உழைக்கக்கூடியது;
குளிருக்கு அடக்கமானது; பலவித கலர்களில் கிடைக்கும்;

1ம் நம். போர்வை விலை ரூபா 11.
2ம் நம். ,, ,, ரூபா 10.
3ம் நம். ,, ,, ரூபா 8 அணா 8.

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"வில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

"ஸ்ரான்டேர்ட்"

## கொழுக்கியோடுகள்.

(Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றோம்:—
முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.
இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.
மூன்றாவது, இந்த வட இலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.
இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றோம். இந்த மூன்றுவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்றாகும்.
ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்வெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை
(H. 25.)

## தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கிள கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்றதிறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்கிருக்கின்றன, விலைவிபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

தந்திவிலாசம்:—
ரூபி. வல்லுவேட்டித்துறை.
(H. 29.)

## திறமானமங்களூர்ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்றோடுகள், பீலியோடுகள், கண்ணாடியோடுகள், சித்திர சகிதமான ஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஓட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
யாழ்ப்பாணம்.

(H. 23).

### கதிர்காம ஆடித் திருவிழா.

வருடாந்த ஆடித் திருவிழா இவ்வருஷம் ஆடி௴ 2௨ தொடங்கி ஆடி௴ 28௨ முடிவுபெறுமெனபதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.
2. இத்திருவிழாவுக்குப் போகும் யாத்திரிகர்களுக்கு உத்தரவுச்சீட்டு(ரிக்கற்)தேவையில்லை.
3. போதிய சாப்பாட்டுச் சாமான்கள் கதிர்காமத்தில் இருக்குமென்பது அசாத்தியம். யாத்திரிகர்கள் தங்கள் சாப்பாட்டுச் சாமான்களைக் கொண்டுபோவது உத்தமம்.
4. 1924 ம் ஆண்டு வைகாசி௴ 30-ந் தேதியின் "கெசற்" பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்ட விதிகளையாத்திரிகர்கள்அநுசரிக்கவேண்டும்.

W. M. Holmes,
ஊவாமாகாண அரசாட்சிஏசண்டருக்காக.

வதுளைக் கச்சேரி,
1924-ம்௵ ஆனி௴ 7௨.
(G. 404)

## புத்தக விளம்பரம்.

(தபாற்செலவு வேறு).

| | ரூ. | சத. |
|---|---|---|
| பாரதம் ஆதிபருவவுரை | 3 | 25 |
| ஷை சபாபருவவுரை | 2 | 25 |
| ஷை இரண்டும் ஒரே முறையில் | 5 | 00 |
| தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சினார்க்கினியம் | 4 | 50 |
| ஷை சொல். சேனாவரையம் | 4 | 00 |
| அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு) | 1 | 75 |
| ஷை சிவானந்தையர் பதிப்பு | 1 | 00 |
| இலக்கியச் சொல்லகராதி | 1 | 75 |
| சித்தியார் சுபக்கம் இருவருரை | 5 | 00 |
| ஷை மு. திருவிளங்கம் பதிப்பு 4-பகுதிகள் | 2 | 10 |
| திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை | 0 | 50 |
| தத்துவப்பிரகாசவுரை | 1 | 75 |
| திருக்குறள் சரவணப்பெருமாளையருரை | 3 | 75 |
| இரகுவமிசவுரை (முதற்பாகம்) | 1 | 50 |
| தருக்கசங்கிரகம் | 2 | 00 |
| ஜாதகபாஸ்கரன் | 3 | 50 |
| இராமாயணநாடகம் | 2 | 25 |
| இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை | 2 | 00 |

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q 47.)

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய

## அரைக்கீரை விரைத் தைலம்




இதன்:குணம்:
பித்த மேகநீரானது சிரசுக்கேறி அதனால் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காதுஇரைச்சல், காதுவலி, ரத்தவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அநுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக் கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

பாக்கிங் போஸ்டேஜ் பிரத்தியேகம். வெளிநாடுகளுக்கு வி. பி. இல்லாததால் முன்பணம் அனுப்பவேண்டும்.

வி. எஸ். கோமளத்தம்மாள்,
மானியுபாக்சுரர்,
8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

(Y. 26)


### ஞானோதய வாசிகசாலை.

இது யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மூத்தநயினார்கோயில் வடக்கு வீதியில் ச. பஞ்சாட்சரக்குருக்களாகிய என்னுடைய கிருகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதில் 1000 ரூபா வரையிற் பெறுமதியான சைவ, வைஷ்ணவமதங்களுக்குரிய புத்தகங்கள். எவரும், எளிதில் வாசிக்கக் கூடிய ஏற்பாட்டுடன் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை விருத்தி செய்தற்குத் தமிழகத்தார் யாவரும் தக்க பொருளுபகரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ச. பஞ்சாட்சரக்குருக்கள்,
ஆனைக்கோட்டை.

(Mis. 490.)

# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி ஆனி 3உ திங்கட்கிழமை.

## இனிச்செய்வதென்ன? ௨.

இக்காலத்திலே நமது நாட்டில் தொழில் செய்து சீவனஞ் செய்தற்கு மார்க்கங்கள் இல்லாதொழிந்தமைக்கான முக்கிய காரணங்களை ஆராய்ந்து சொல்லுதல் முடியுமேயன்றி, இனி அத்தொழிலைச் செய்து காலங் கழிப்பது, இவ்விபத்தை எவ்வாறு நீக்கிக்கொள்வது என்பவைகளை ஆராய்ந்து சொல்லுதல் அத்துணை இலகுவன்று. தேசாபிமானிகளும், சனத்தலைவர்களும், பத்திராசிரியர்களும், யாதும் வேலை அகப்படாது மனச் சஞ்சலமுறும் இளைஞரும், அவர்கள் பெற்றாரும் இவ்விஷயங்களைக் குறித்துச் சதா சிந்தித்த வண்ணமே இருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கும் இந்த இடரை நீக்குதற்கான உபாயம் இதுகாறும்புலப்படவில்லை. "எவன் அபாயஞ் சொன்னானோ அவனே உபாயமுஞ் சொல்லுதல்வேண்டும்" எனப் பஞ்சதந்திரத்தில் ஒரு வாக்கியமுண்டு.

எங்களை இந்த ஆபத்தான நிலையிற் கொண்டுவந்து விடுத்தவர்கள் யாரென்னில் எங்களை நூற்றுமுப்பதிற்கு மேற்பட்ட வருடகாலமாகப் பரிபாலித்துவரும் அரசினரேயாவர். ஆதலால் அந்த அரசினரே இப்பொழுதும் எங்கட்கு நேர்ந்துள்ள ஆபத்தை நீக்குதற்கான உபாயத்தைச் சொல்லிப் பேருதவியுஞ் செய்தல் வேண்டும். பிரசைகள் ஈட்டும் பாவ புண்ணியமும், அவர்களின் வாழ்வுந் தாழ்வும், வறுமையும் செல்வமும், சீருஞ் சிறப்பும், இன்ப துன்பங்களும், அறிவும் மௌட்டிகமும், நாட்டில் மழையும் அஃதின்மையும், இன்னபிறவும் அரசனைப் பொறுத்தனவேயா மென்பது பெரியார் கொள்கையாகும். நாங்களெல்லாரும் தொழின் முயற்சியின்றி உண்ணவுணவும் உடுக்கத் துணியுமின்றித் தாரித்திரியத்தினுல் இடைஞ்சற்பட அரசினர்மாத்திரம் யாதுங் குறைவின்றி மேலதிகமான அரசிறை வருவாயைப் பெற்றுக்கொண்டு இனிது வாழுதல் மனுநீதிக்கடாது. பூந்தோட்டக்காரன் நிலத்தைப் பண்படுத்தி புஷ்பச் செடிகளை நாட்டி வேலியடைத்துப் பாத்திகோலி நீர்ப்பாய்ச்சிக் களைபறித்துக் கண்ணை இமை காப்பதுபோலக் காத்துக் காலம்பார்த்திருந்து பூக்கள் அலர்ந்தபின் செடியில் நோவாமல் மலரை மாத்திரங் கொய்தெடுப்பதுபோல் அரசனும் பிரசைகளிடத்திலே வரிப்பணம்அறவிடல் வேண்டுமென்பர்.

தொழின்முயற்சி யில்லாமையால் இப்பொழுது நேர்ந்த சங்கடத்தை நீக்க வேண்டுமானால், அரசினர் இலங்கையில் இப்பொழுது ஊட்டுங் கல்வி முறையை அறவே யொழித்துச் சாதீயக் கல்வியை யூட்டல் வேண்டும். நமது நாட்டில் ஊட்டப்பட்டுவருங் கல்வி ஏதும் கிளாக்குமுதலிய அற்ப உத்தியோகங்களைப் பார்த்தற்கும், ஐயிரோப்பிய நாட்டில் இருந்து வரும் பொருட்களை நம்மவர்கள் பணங் கொடுத்து வாங்கி உபயோகித்து ஐயிரோப்பிய வியாபாரிமாரின் வருவாய்க்கு வழிகாட்டுதற்கும் நித்திய தரித்திரத்தோடு கூடி வாழ்வதற்கும் எங்கள் அடிமைத்திறத்தை கெடாது நிலைநிற்கச் செய்தற்கும் சாதி சமயம் தேசம் பாஷை என்னும் இவைகள் மீது கொண்டுள்ள அபிமானத்தைக் குன்றச் செய்தற்கும் இவை போன்ற வேறுதீமைகளை விளைத்தற்குமே உதவுமன்றி எமக்கு எவ்வகையான நன்மையையும் பயக்க வல்லதன்று. ஆதலால் இக்கல்வியை, முற்கூறியபடி அறவே யொழித்து, இந்நாட்டிலுள்ள தமிழ் ஆங்கில வித்தியாசாலைகளில் சிறுவர்கட்குத் தமிழ்க் கல்வியையும் ஆங்கிலக் கல்வியையும் சரிவர ஊட்டுவதோடு, கமச்செய்கை நெசவுதொழில் மற்றுங் கைத்தொழில்கள் என்னுமிவைகளையும் கிரமமாக ஊட்டிவருதல் வேண்டும். கல்வி கற்றற்கான பணச்செலவைச் சுருக்கிக் கொள்ளுதல் வேண்டும். மாணுக்கரும் ஆசிரியர்களும் தங்கள் தங்கள் சாதிக்குரிய உடை நடை பாவனைகளை அனுசரித்தல் வேண்டும். பட்டினங்களிலுள்ள கல்லூரிகளிற் கல்வி பயிற்றும்படி கைத்தொழிலிற் சிறந்தவர்களை மேலைத்தேசத்தி லிருந்து அரசினரே தருவித்து, இங்குள்ள சிறுவர்களுக்கு சவர்க்காரம், நெருப்புப்பெட்டி, கண்ணாடி, மெழுகுவர்த்தி, சிமந்து, கொளுக்கிமீயாடு முதலிய அவசியகமான பொருட்களைத் தாமாகச் செய்துகொள்ளத் தக்க அறிவை யூட்டுவித்தல் வேண்டும். இப்படிப்பட்ட பொருள்களை இங்குள்ளவர்கள் ஆக்குதற்குப் பழக்கிவிட்டால் இங்கிலாந்து முதலிய மேலைத் தேசங்களிலிருந்து வரும் பொருட்கள் இங்கே செலவாக மாட்டா. இதனால் மேலைத்தேச வியாபாரிமாரின் வியாபாரம் குன்றும் என்ற எண்ணம் நமது அரசினரிடத்திற் கனவிலும் இருக்கவொண்ணாது. சுவரிருந்தாற்றான் சித்திரந் தீட்டலாகும் என்றபிரகாரம் நாங்கள் செல்வத்தோடு கூடியிருந்தாற்றான் அரசினர் எங்களை ஆநந்தமாகப் பரிபாலித்து விரும்பியபடி வரியறவிடுதலாகும். இல்லையேல் அரசினர் பிச்சைக்காரன் வீட்டிற் புகுந்த கள்வருடைய கதியை யடைவர்.

## "தலையே நீ வணங்காய்."

பரமபதியாகிய சிவபெருமானைத் திரிகரண சுத்தியுடன் வணங்குதலே மாந்தர் கடனாகும். அவ்விறைவனை வணங்குவதற்காகவே தலையை நமக்குத் தந்தருளினரென்பது "தலையே நீ வணங்காய்" எனவும், "வணங்கத் தலை வைத்து" எனவும், 'பெண்ணொருபாகனைப் பணியுந் தலைகளே தலைகள்" எனவும், "தலையாரக்கும்பிட்டுக் கூத்துமாடி" எனவும் "தாழ்ந்தச் சென்னியும் தந்த தலைவனை" எனவுங் கூறப்படுவனவற்றானும் பிறவாற்றானும் புலனாகும். கடவுளைத் தலையாரக்கும்பிட்டு உள்ளம் நெக்குருகிக் கண்கள் ஆனந்தஅருவி சொரியத் தம்வச மிழந்து நின்று துதிப்போர்க்குத் திருவருளுண்டாகு மென்றும், அத் திருவருள் முன்னை வினைவசத்தால் இம்மையில் வந்து சேரும் இடர்களைப் போக்கும் என்றும், ஈற்றிலும் கயிலை யேற்றுமென்றும் எமது சமய நூல்கள் ஒவ்வொன்றும் தனித்தனி கூறும். ஆதலின் சிவாலயங்கள் தோறும் தலை தாழ்த்தி வணங்குதல், எக்காலத்திலும் இன்றியமையாது வேண்டப்படுவதாகும்.

எமது நாட்டில் அநேக ஆலயங்கள் இருக்கின்றன. அவ்வாலயங்கள் சனங்கள் நெருங்கி வசிக்கும்இடங்களின் மத்தியில் இருந்தும் முறைப்படி சென்று வணங்குவோரையில்லாதிருக்கின்றன. ஆலயம் சமீபத்திலிருப்பவும், அங்கே அடிக்கப்படும் மணி யோசை எமது காதுகள் செவிடுபடும்படி இடிப்பவும் நாம் கடவுள் சந்நிதியிற் சென்று தலைதாழ்த்தி வணங்காமலிருக்கலாமா? அந்தப் பரம்பொருளாகிய சிவபிரானுக்கு நாம் மீளா அடிமைகளல்லவா. எல்லாமுதவும் அந்த ஈசனுடைய முன்னிலையில் தலை தாழ்த்தி நின்று எமது குறைமுறைகளை விண்ணப்பஞ் செய்தாலன்றோ நாம் ஈடேறலாம். இக்காலத்திலே சைவசமயிகளிற் பெரும்பாலார், எல்லாம் வல்ல இறைவனைத் தலைதாழ்த்தி வணங்கக் கூசுகின்றனர். கடவுள் சந்நிதியில் தலையைச் சிறிதுஞ் சாயாது இறுமாந்து நிற்கின்றனர். பிரயோசனமில்லாத அற்ப பொருளைத் தானும் பிறரிடம் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அவர்களுக்குப் பன்முறை தலை தாழ்த்துகின்றனர்; அச்சத்துடன் அடங்கி யொடுங்கி இன்மொழி கூறிப் புகழ்ந்து போற்றுகின்றனர். அற்ப பொருளைப் பெறும் பொருட்டு அத்துணை இன்மொழிகூறித் தலை தாழ்த்தாது வேண்டிய வேண்டிய பொருளைத் தரத்தக்க பரம்பொருளை வேண்டித் தலைவணங்கி நிற்றலன்றோ சிறப்புடைத்தாகும். எமது இந்த தேகமும் வாழ்வும் மனைவி மக்கள் சுற்றமித்திராதியோரும் பொருந்திய உலகம் தோன்றி மறையும் மின்னலுக்குச் சமானமாகும். எத்தனை தாயர் வயிற்றிற் பிறந்தோம்; எத்தனை சுற்றத்தவரைக் கண்டோம்; எத்தனை மகவைப் பெற்றோம்; எத்தனை மனைவியைக் கொண்டோம். இவைகளை நாம் ஒருசிறிதேனும் ஊன்றி யோசிக்கவொண்ணாதா? இந்தத் தேகம் அழிந்துவிடுமென உள்ளபடியுணர்வோமாயின் உண்ண மனம் வருமா? அன்றிச் சிறிது உறக்கந்தானும் வருமா? என்றென்றைக்கும் அழியாது நிலைத்திருக்கின்றது அந்த மோக்ஷசாம்பிராச்சியமல்லவா? பரம்பொருளாகிய சிவபெருமானே அந்தப் பெரும்பேற்றைக் கொடுப்பவராவர். அவர் எமது ஈடேற்றத்தின்பொருட்டுத் திருவாய்மலர்ந்தருளிய சற்போதங்கள் ஒவ்வொன்றும் பொன்போன்றனவாகும். அவை ஒவ்வொன்றும் எமது இறைவனைத் தலையினால்வணங்கவேண்டுமென வற்புறுத்தும். ஆதலின் "தலைமாலை தலைக்கணிந்து, தலையாலே பலி தேருந்தலைவனை, தலையே நீ வணங்காய்" என்பதாம்.

## சைவச் சகோதரர்கட்கு ஒருவிண்ணப்பம்.

(லோகோபகாரி.)

ஆன்மாக்கள் தத்தம் பக்குவத்திற்கேற்ப இறைவனை வழிபட்டு மேனெறிச் சென்றுய்யுமாறு அவனருளாற் பற்பல சமயங்கள் தோன்றிநின்றுநிலவின; நிலவுகின்றன. அவற்றுள் நம் சைவசமயமானது முதன்மைபெற்றதெனவும், சமயங் கடந்த மோன சமரச நெறியாக விளங்குவதெனவும் மதித்தற்குரியதா யுள்ளது. ஒன்றோடொன் றெவ்வாமல் உள்ள பல சமயங்கள், பொருள்கள், நூல்கள் இவையெல்லாம் நீதியினுல் தன்னிடத்தேகாணநிற்பதே வைதிக சைவத்தின் அழகென ஆன்றோர் வியந்து கூறுவர். ஆண்டவனிடத்தும் உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி இன்படைதலையே தன் உயிர்நாடியாகக் கொண்டுளது இச்சமயம். தொன்மையாலும் மெய்ந்நூல்களாலும் சமயகுரவர்களாலும், சித்திமுத்திசேர்ந்த மற்றைப் பெரியோர் பலராலும் அளப்பருஞ் சிறப்புப்படைத்த இச் சைவசமயம், இக்காலில் தன் மேன்மைக்கும் மெய்ம்மைக்கும் ஏற்ற அளவில் மக்கள் வாழ்க்கையிலும் நினைவிலும் நிலைபெற்று நின்று தன் அருளாட்சி புரியவில்லை. இதனாற் பொதுவகையில் உலகிற்கும் சிறப்புவகையிற் சைவசமயிகட்கும் விளைந்துள்ள தீமைகள் மிகப்பல.

எல்லாச் சமயங்களும் முடிவில் இறைவன்பால் உயிர்களைக் கொண்டுசேர்ப்பனவாதலால் அவை யாவும் தத்தம் உண்மை நெறியில் நின்று தம்மைப் பின்பற்றுவோரை நலமுறச்செய்து விளங்குதலே இயல்பானநிலைமை. பிறசமயச் சகோதரர்கள்பலரும் இக்கடமையை யுணர்ந்து தத்தஞ் சமயவொளி மங்கா வண்ணம் பாதுகாத்து வருகின்றனர். பிறசமயத்தவரைத் தம்மதத்திற் சேர்த்தலுங் கடமையெனச் சில சமயத்தார் கொண்டு ஆயிரக்கணக்காக நம்மவரைத் தம்மதத்திற் சேர்த்தும்வருகின்றனர். இத்தகைய நிகழ்ச்சிகளை நம்மனோர் பலர் நாடோறுங் கண்கூடாய்க் கண்டும், தஞ்சமயக்கடமையை யுணராது எளிய நோக்கிலும் வாழ்விலும் இன்புற்றிருக்கின்றனர். எச்சமயமும் வாழ விரும்பும் சைவர் தஞ்சமய மட்டுந் தாழப் பார்த்திருத்தல் தகுதியாமோ? இன்னுஞ் சிறிதுகாலம் இங்ஙனமே நாம் வாளா கிடப்போமாயின், நம்சமய சத்தி நாலளவில் ஒடுங்கிவிடும். நம் முன்னோர் பேணி வளர்த்து நம்மிடம் ஒப்பித்த அரும்பெறற் செல்வமாகிய நம் சமயத்தையும் அதன் அமைப்புக்களையும் போற்றாது பொன்றவிட்ட பாவம் நம்மைச் சூழும். நம் பிற் சந்ததியாரின் நிந்தனைக்கும் ஆளாவோம். ஆண்டவன் திருவருளுக்கும் அயலாவோம்.

இதையுணர்ந்த நஞ்சமய சோதரர் சிலர் ஆங்காங்கு சைவசபைகளை உண்டாக்கி ஒல்லும் வகையால் சுருங்கியவளவில் சமயத் தொண்டு இயற்றி வருகின்றனர். பல காரணங்களால் நஞ் சமயத் திருக்கோயில்கள் திருமடங்களிற் பல தத்தம் உயர்நிலையில் நின்று வழுவி நம்மவர்க்கும் போதிய உதவிசெய்யத் தவறினமையாலும் புறமதப் படையெடுப்பாலும் நம்மனோர் சமயாபிமானக்குறைவாலும் சைவசமயத்தின் ஆற்றல் பெரிதுங்குன்றியுள்ள இக்காலத்தில சமயக் கடமை யுணர்ந்த சைவ சகோதரர்கள் தத்தந் தொண்டுகளை ஒன்று சேர்ந்து செய்தால் மிக்க நன்மையுண்டாகும். ............நம்மவர்க்கு நஞ்சமய உண்மையை உணர்த்துதற்கேனும் பிரசாரவேலை ஒழுங்குபெற இனி நடைபெற வேண்டுவதவசியம். அதன்மேலும் செய்ய வேண்டிய வேலைகள் பலவுள. இவ்வுண்மைகளை யுணர்ந்து பெருந் தொண்டுகள் புரிந்துவரும் மேலோர் சிலர் இப்போதும் நம்மிடை யிருந்துவருகின்றனர். அவர்களோடு சேர்ந்து அவர்களை ஊக்குவதும் இயன்ற உதவிசெய்வதும் மற்றைச் சகோதரர் கடமை.

## மதிப்புரை.

சிங்கப்பூரிலிருந்து வார மிருமுறை வெளிவரும் பொதுஜனமித்திரன் என்னும் பத்திரிகை நமது இந்து சாதனத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது:—

"இது யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஒரு சிறந்த பத்திரிகை. இது வாரமிருமுறை வெளிவருகிறது. எல்லாச் சமயங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு அவை எல்லாவற்றினும் மேம்பட்டு விளங்கும் சைவசமயத்தைப் பாது காத்தலும் தேச முன்னேற்றத்தை நாடி உழைத்தலும் இப்பத்திரிகையின் சிறப்பிலக்கணங்களாம். இப்பத்திரிகையிற் காணப்படும் இன்னொரு சிறந்த இலக்கணத்தைப்பற்றி நாம் இங்கெடுத்துக் கூறாமலிருக்க முடியாது. இப்பத்திராசிரியர் இலக்கண இலக்கிய வரம்புக்குட்படுத் தமிழ் எழுதி வருகின்றனர். இந்நெறியே செந்நெறி என்பதையும் தம் ஊரில் வழங்கும் இலக்கண வரம்பில் நில்லாதனவும் பொருள் பயவாது வாளாவிருந்தொழிவனவுமான அபத்த மொழிகளை எடுத்தாளல் தமிழறிஞர் மனத்தை சுருமென்பதையும் இப்பத்திராசிரியர் உணர்ந்திருத்தல் பாராட்டத்தக்கது."

## சமாசாரம்.

காலநிலை:—வெய்யிலதிகம். காற்றுக் குறைந்துவிட்டது.

எரிந்துபோயிற்று:—சென்ற இரவு கொக்குவில் புதுக்கோயிலிலே உற்சவகாலத்தில்விடப்பட்ட வாணமொன்றினால் கொக்குவிலிலிருக்கும் சைவாங்கில வித்தியாசாலைக் கூரை தீய்க்கிரையாயிற்று.

புலோலிப் பசுபதீசுவரர் கோவில்:—இப்புராதன சிவாலயத்தில் நடந்துவந்த வசந்த மண்டபத் திருப்பணி நிறைவேறி விட்டது. இந்த ஆனிமீ 10உ திங்கட்கிழமை அனுராரோகணமாகி மகோற்சவம்நடைபெறும். 24உ திங்கட்கிழமை ரதோற்சவமும் அடுத்தநாளாகிய ஆனியுத்தர புண்ணிய தினத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

மனோதத்துவ சாஸ்திரம்:—யாழ்ப்பாண மனோதத்துவசாஸ்திர சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் யாழ்ப்பாண வித்தியாகந்தோரிலே இந்தமாதம் 16உ நடைபெறும். அவ்வேளையில் வித்தியாகர்த்தர் செக்கென்டெரிப் பாடசாலைகளைப்பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்வார்.

வாணத்தால்நேர்ந்த பேராபத்து —மீசாலையிலுள்ள ஒரு அம்மன்கோவிலில் உற்சவகாலத்து வாண வேடிக்கையில் ஒரு சிலைச்சக்கரம் அச்சினின்றும் கழன்று புறப்பட்டுச் சென்று அடித்து மூவரை உடனே கொன்றுவிட்டதென்றும் சிலரைப்படுகாயப்படுத்திவிட்டதென்றும் பலரை அற்பகாயத்தோடு விடுத்ததென்றும் அறியலானோம்.

யாழ்ப்பாணத்திற்கும்வருவார்:-உடுவில் பிரமஸ்ரீ சங்கரசுப்பையர் என்னும் பழைய நாமத்தையுடையவரும் பெருந் துறவியுமாகிய சுவாமி சச்சிதானந்த ராசயோகிகள், யாழ்பாணத்திலுள்ளார் பலர் வேண்டுகோட் கிணங்கி யாழ்ப்பாணத்திற்கு இன்னுஞ் சில தினங்கள் செல்ல வருதற்கு நோக்கங்கொண்டிருக்கின்றாரென்பதை அறிந்து சந்தோஷமானோம்.

சைவப்பிரசங்கம்:—நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் வசந்த மண்டபத்திலே மகோற்சவ உபயக்காரரின் வேண்டுகோளின்படி சென்ற வெள்ளிக்கிழமை இரவு 8 மணி வரையில், இந்துசாதன பத்திராசிரியராகிய ஸ்ரீ ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையவர்கள "ஆலய வழிபாடு" என்னும் விஷயமாக ஓர் சிறந்த பிரசங்கஞ்செய்தனர். ஷை கோவில் மகோற்சவ ஆசாரியராகிய பிரமஸ்ரீ சபாபதிக் குருக்களவர்களால், உற்சவகாலங்களிலே கோவில்களில் பிரசங்கம் செய்துவருதல் நல்லது என்னும் கருத்தையுமமைத்து ஓர் குறிப்புரை கூறப்பட்டது.

மட்டக்களப்புக்குத் தூரசிரவண யந்திரம்:- மட்டக்களப்பிலே தூரசிரவணயந்திரம் அமைத்தற்காக இப்பொழுது மதிப்புவேலை நடைபெறுகின்றது.

கௌரவ தம்பிமுத்துவும் கனகசபை முதலியாரும்.—இவர்கள் இருவருக்கும் இடையிலேற்பட்ட வழக்கில் அரசாங்க லிகிதரும் அரசிறை உத்தியோகத்தலைவரும் மது பரிபாலனப் பகுதிக் கொம்மிஷனரும் வைத்தியப்பகுதித் தலைவரும் வேறுசிலரும் சாட்சிகளாய் நிற்கின்றனர். வழக்கு இந்த ஜூன்மீ 23ந்உ விசாரணை செய்யப்படும்.

உதவிப் போஸ்மாஸ்றர் தற்கொலைசெய்துகொண்டார். — அநுராதபுரத்திலே ஹவலுணு உதவிப்போஸ்மாஸ்றராகிய கொடிஹாரா என்பவர் தபாலாபீசிலுண்டான பணக்குறைவு காரணமாக இந்தஜூன்மீ 11ந்உ புதன்கிழமை அநுராதபுரப் புகைரதஸ்தானத்திலிருந்து ஒரு மைல் தூரத்துக்கப்பால் புகைரதத்தினுல் இடறுண்டு இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

கொலை செய்யும் புலி:—திருக்கோணமலை மட்டக்களப்பு வீதியை அடுத்த காட்டில் உலாவிக் குரூர கொலைசெய்யும் புலி இன்னும் அகப்படவில்லை. இதுவரையில் அது 8 மனுஷரைக் கொன்றுவிட்டது. ஒரு மனுஷனைக் கடுமையாய் ஊறுபடுத்திற்று. அதனைக்கொல்பவருக்கு 100 ரூபா இனாம் கொடுப்போமென்று இப்பொழுது அரசினர் விளம்பரஞ் செய்திருக்கின்றனர்.

ஒரு போஸ்மாஸ்றரைக் காணவில்லை:—தொடன்வெலவிலே போஸ்மாஸ்றராக இருந்து இப்பொழுது இளைப்பாறியிருக்கும் மிஸ்டர் எஸ். ஆர். விஜயசூரிய என்பவர் சென்ற வெள்ளிக்கிழமை கொழும்பிலிருக்கும் தனது மகனைச் சந்தித்துப் பேசியபின் ஊருக்குத் திரும்பிவிட்டார். அதன்பின் அவரைக் காணாமையினால் பொலிசர் தேடித்திரிகின்றனர். மாயமாய் மறைந்துவிட்டார் போலும்.

இலங்கை இந்திய புகையிரதவீதி —இந்த வீதியிலே இந்தியாவுக்குச் செல்லும் பிரயாணிகள் மதவாச்சியில் இறங்காது வண்டியிலிருந்தபடியே அப்பாற் பிரிந்துபோகத்தக்கதான ஒழுங்கு நெடுகலும் நடைபெற்று வந்தது. இப்பொழுது பிரயாணிகள்மதவாச்சியிலிறங்கி இரண்டு மூன்று மணித்தியாலநேரந் தரித்துநிற்கவேண்டியதாய் அந்த ஒழுங்கு மாறிவிட்டது. பிரயாணிகளுக்கு இது செதியீனமான ஒழுங்காயிருப்பதால, இவ்விஷயத்தைப்பற்றிய முறைப்பாடொன்று புகையிரதத் தலைவருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. தலைவர் இந்த மனுவைக் கவனிப்பாரென நம்புகிறோம்.

—உதயதாரகை.

**பிரான்சின் தலைவர் பதவி:**—எம். டௌமர்க் என்பவர் பிரான்சிய குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**லண்டனில் மோட்டார் விபத்துக்கணக்கு**—சென்ற ஜனவரிமாதம் முதல் மார்ச்சுமாதம் முடிய மூன்று மாதத்தில் லண்டனில் மோட்டார் யமன்களால் 17691 விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் 174 பேர் எமலோகஞ் சென்றனர்.

**பிலிப்பையின்தீவு நித்திரைவிட் டெழுகின்றது:**—பிலிப்பயின் தீவுச் ஜனங்கள் அமெரிக்க அரசாங்கத்தார் தங்கள் நாட்டிற்கு இன்னும் சுயராஜ்யம் அளியாமையினால், அமெரிக்கசரக்குகளை வாங்குவதில்லை யென்று மும்முரமாக விலக்கிவருகிறார்கள்.

**மூன்றுகொலைக்கு 100கொலை:**—மெசப்பொற்றேமியாவில் கிர்குக் என்ற இடத்தில் மேயீ 4௳ சுதேசிப்படையொன்றைச்சேர்ந்த மூன்று போர்வீரர்களுக்கும் மூன்று கடைக்காரர்களுக்கும் ஏற்பட்ட தகராறினால் படைவீரர்களுக்கும் ஊரார்களுக்கும் சண்டையேற்பட்டது. படைவீரர்களில் மூவரும் ஊரவரில் நூறு பேரும் மாண்டு போனார்களாம். இதைப்பற்றி இன்னும் விசாரணை நடக்கிறதென்று பார்லிமென்டில் தோமஸ் என்ற மந்திரி சொல்லுகிறார்.

**சீர்கேடு வெளிவந்தமையையிட்டுப் பாதிரியார் பரிதாபப்படுகின்றார்:**—வெள்ளையர்களின் கொள்ளை, கொலை, வியபிசாரம், நடனம், விவாகரத்து இவைபோன்ற சீர்கேடுகளை விளக்கும் சினிமாப்படங்களை இந்தியாவிற் காட்டுவதால், இந்தியர்களின் கண்களில் வெள்ளையர் தாழ்வாகத் தோன்றுகின்றனர் என்று லண்டன் வெம்பிளிக் கண்காட்சியில் பேசிய திரு கெல்வேலிப் பாதிரியார் சொல்லுகின்றார். ஆனால் வெள்ளையர்களுக்குச் சிறுமை ஏற்படுகிறதென்று வருந்தும் அந்தப்பாதிரியார் வெள்ளையர்கள் செய்யும் மேற்கண்ட சிறுமைகளுக்காக வருந்தக்காணேம்.

**நிறத் தொல்லை:**—தென்னாபிரிக்காவிலுள்ள ஜப்பானிய ஸ்தானாதிபதி சமீபத்திற் கிழக்காபிரிக்காவுக்குச் சென்றார். கிழக்காபிரிக்கா அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அவரை ஆடம்பரமாக வரவேற்றார்கள். அவர் ஒரு கிளப்பில் தாமதிப்பதாகச் சொன்னாராம். ஆசியாக்காரர்களுக்கு இடங்கொடுக்க முடியாதென்று கிளப்புக்காரர் மறுத்துவிட்டார்கள். அதிகாரிகள் வற்புறுத்தியும் அவர் கவர்னராயிருந்தாலும் இடங்கிடையாதென்று கிளப்புக்காரர் சொல்லிவிட்டனராம். ஜப்பானியரை முக்கால்ஐரோப்பியரென்று சொல்லலாம். ஆசியாக்காரர் மீது ஐரோப்பியருக்கு இவ்வளவு அருவருப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஆசியாக்காரரைக் கொள்ளையடிப்பதில்மட்டும் ஐரோப்பியருக்கு விருப்பமிகுதியாயிருக்கிறது.

**ஜப்பானும் அமேரிக்காவும். —** அமெரிக்காவில் ஜப்பானியர் குடியேறக்கூடாதென்று சட்டம் தோன்றியிருப்பதால், ஜபபானியருக்குப் பெரிதும் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது; தலைநகரான டோக்கியோவில் ஜனங்கள் பெரிய கிளர்ச்சி செய்கிறார்கள். ஜப்பானிலுள்ள அமெரிக்கர்கள் அனைவரையும் ஜப்பானை விட்டு வெளியேற்றவேண்டுமென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். சில தினங்களுக்கு முன் டொக்கியோவில் சில ஜப்பானியர்கள் அமெரிக்கர்கள் நடனம் புரிந்து கொண்டிருந்த ஒரு விடுதிக்குட் புகுந்து அவர்களை அவமதித்துக் கலைத்துவிட்டார்கள்; அமெரிக்கர்களை வெளியேற்றுங்கள் என்ற துண்டு விளம்பரங்களை விநியோகித்தார்கள். அமெரிக்க நாடகங்களைக் காட்டிய சினிமாச் சாலைகளிற் புகுந்து அவற்றை மூடச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் ஒருவரையும் துன்புறுத்தவில்லை. பொலீசார் ஒன்றிலும் தலையிடவில்லை; ஜப்பான் பத்திரிகைகள் முன்னரே அறிந்து இந்தச்சம்பவங்களைப் படம் பிடித்திருக்கின்றன. அமெரிக்காக் குடியேற்றச் சட்டத்தை ஆட்சேபிக்கும்பொருட்டுத் தற்கொலை செய்துகொண்ட ஜப்பானியரின் ஞாபகார்த்தமாக நடந்த பிரார்த்தனையில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்திருந்தார்கள்.

—லோகோபகாரி.

## முல்லைத்தீவு கற்சிலைமடேச் சிவாலய வருடாபிஷேகம்

முல்லைத்தீவுப்பற்றைச் சார்ந்த கற்சிலைமடுச் சிவலிங்கப் பெருமானுடைய சிவாலயத்தில், இரத்தாக்ஷி௵ வைகாசி௴ 24௳ வெள்ளிக்கிழமைகாலை 10மணி தொடக்கம் 3 மணிவரையில் ஸ்நபநாபிஷேகமும் விசேஷ பூசைகளும் நடைபெற்றன. மாலை 8 மணி தொடக்கம் 10 மணிவரையும் வெள்ளாவத்தை ஸ்ரீ எம் வேலுப்பிள்ளை அவர்களுடைய அக்கிராசனத்தின்கீழ் இரத்தினபுரியில் வசிக்கும் பிறக்டர் ஸ்ரீ க. சிதம்பரநாத பண்டிதர் அவர்களால் "சைவசமயம்" என்னும் விஷயம் மிகத் தெளிவாயும், எவர்களுக்கும் புலப்படும்படியாகவும் பேசப்பட்டது. பின் அக்கிராசனாதிபதியவர்களால் முன்பேசிய விஷயத்தைத் தழுவியும், ஓர் சைவப்பாடசாலை அவசியம் வேண்டும் என்பதைப்பற்றியும் வற்புறுத்திப் பேசப்பட்டது. 12 மணியளவில் இபாராதனையாகி சுவாமி இடபவாகனரூடராய் வீதிவலம்வந்து காட்சிகொடுத்தருளினர். அடுத்தநாள் சனிக்கிழமை உதயத்தில் ஸ்ரீ எம். வேலுப்பிள்ளையவர்களால் மங்கள வாத்திய கோஷத்துடன் சைவ வித்தியாசாலைக்கு அஸ்திவாரமும் இடப்பெற்றது.

கடித.

## கோலப்பிலா இந்துவாலிபசங்க வருஷாந்தக்கூட்டம்.

சென்ற வியாழக்கிழமை (22-5-24) பிற்பகல் 7மணியளவில் கோலப்பிலா இந்துவாலிபசங்க நான்காவது வருஷாந்தக்கூட்டம் மகேஸ்வர நதியுடன் சங்கமண்டபத்தில் கூடப்பட்டது. அன்றான்று சங்க அக்கிராசனாதிபதியவர்களே அக்கிராசனம் வகித்தனர்.

சங்கக் காரியதரிசியவர்களால் சென்றுபோன கூட்டத்தின் நூசனமும், வருஷாந்தப் பத்திரமும், பற்றுவரவுப்பத்திரமும் வாசிக்கப்பட்டுச் சர்வசன அங்கிகாரம்பெற்றபின், இவ்வருஷ உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஸ்ரீ செ. நாகலிங்கமவர்கள் அக்கிராசனராகவும், ஸ்ரீ மு. வைத்தியலிங்கம் அவர்கள் உப அக்கிராசனராகவும், ஸ்ரீ சி. பொன்னையா அவர்கள் காரியதரிசியாகவும், ஸ்ரீ சி. ஆறுமுகம் அவர்கள் உப காரியதரிசியாகவும், ஸ்ரீ க. சிவகுரு அவர்கள் பொக்கிஷாதிபதியாகவும் நியமனம் பெற்றனர்.

யாவர்க்கும் பயன்படும்பொருட்டு இனிய செந்தமிழ்நடையிலே எழுதப்படும் பத்திரிகைகளும், அறிவுவிர்த்திக்குரிய உயர்தர அங்கிலப் பத்திரிகைகளும் சங்கத்திற்கு வரவழைக்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

சென்ற வருஷம் நிர்வாக சபையார் சங்கத்திற்கு அத்தியாவசியகமான கருமங்களைச் செய்ததுமல்லாமல் அதன் ஈடேற்றத்தின் பொருட்டு விடாமுயற்சிபூண்டு அதிசிரத்தையோடு உழைத்துவந்தார்களெனவும் சங்க அக்கிராசனர் விளம்பினர். இன்னும் இச்சங்கம் மேலும் சிறப்பும் மேன்மையும் வளர்ச்சியும் அடையும் வண்ணம் வேற்றுமையின்றி யாவரும் ஒத்துழைக்கவேண்டுமென்றும், அதற்கு மகேஸ்வரமூர்த்தியின் அத்தியந்த திருவருள் அவசியமெனவுஞ் சொல்லி முடித்தார். ஈற்றில் 9மணியளவில் கூட்டம் வழக்கம்போல் தேவாரபாராயணத்துடன் முற்றுப்பெற்றது.

26-5-14. சங்கக் காரியதரிசி.

## தமிழாசிரியர் சங்கம்.

சுதேச பாடசாலைகளில் புது ஒழுங்குச் சட்டத்திற்கியையப் பாடங்களைப் படிப்பிக்கும் முறையைப் புகட்டும்நோக்கமாக உபவித்தியாதரிசி ஸ்ரீ T. K. பொன்னையா அவர்களால் இந்தமாதம் 6-ம் 7-ம் தேதிகளில் ஓர் கூட்டம் பருத்தித்துறைக் காட்லிக்கல்லூரியில் கூட்டப்பெற்றது.

6-ம்௳ வெள்ளிக்கிழமை: வட இலங்கை வித்தியாதரிசி ஸ்ரீ எஸ். கந்தையா அவர்கள் அக்கிராசனத்தமர்ந்தனர். உப வித்தியாதரிசிகள் பிரமஸ்ரீ. தி. சதாசிவஐயர் அவர்களும், ஸ்ரீT. K. பொன்னையா, ஸ்ரீசி. எஸ். துரைராசா அவர்களும் சிலபாடசாலையதிபர்களும், வடமராட்சி தென்மராட்சி, வலிகாமப் பகுதியிலுள்ள ஏறக்குறைய 400 ஆசிரியர்களும் சமுகமளித்தனர். காலை 9½ மணிவரையில் அக்கிராசனாதிபதியவர்கள் முன்னுரை கூறிக் கூட்டத்தையாரம்பித்தனர்.

மிருசுவில் ஸ்ரீ வேலுப்பிள்ளை உபாத்தியாயரவர்கள டிறில் நடத்திக் காட்டினர். கட்டைவேலி ஸ்ரீ சின்னத்தம்பி உபாத்தியாயரவர்கள் 3-ம் வகுப்பிற்கு நிட்டலளவையைப்பற்றியும், கரவெட்டி ஸ்ரீ கதிர்காமுஉபாத்தியாயரவர்கள் 4-ம் வகுப்பிற்கு பருவப்பெயர்ச்சிக்காற்றைப் பற்றியும், வரத்துப்பளை ஸ்ரீ அருணாசல உபாத்தியாயரவர்கள் 6-ம்வகுப்பிற்கு பெயரைப்பற்றியும் படிப்பித்துக்காட்டினர்.

சங்கத்தானை ஸ்ரீ கதிர்காமு உபாத்தியாயரவர்கள் கணிதத்தைப் பற்றியும், நெல்லியடி ஸ்ரீ துரையப்பா உபாத்தியாயரவர்கள் நெடுங்கணக்குப்படிப்பிக்கும் முறையைப்பற்றியும், மட்டுவில் ஸ்ரீ இளையதம்பி உபாத்தியாயரவர்கள் பூமிசாஸ்திரத்தைப்பற்றியும், உடுப்பிட்டி ஸ்ரீ சின்னையா உபாத்தியாயரவர்கள் ஆசிரியர் கிலைமையைப்பற்றியும் ஒவ்வோர் வியாசம் வாசித்தனர். மிஸ்டர். டீ. டபுள்யு. மில்லர் அவர்கள் பூமிசாஸ்திர விஷயத்தையிட்டு அரிய குறிப்புரை கூறினர். ஒவ்வோர் விஷயமுடிவிலும் ஆசிரியர் சிலரும் வித்தியாதரிசிகள் பிரமஸ்ரீ. தி. சதாசிவஐயர் அவர்களும், ஸ்ரீ டீ. கே. பொன்னையா அவர்களும் அக்கிராசனாதிபதியவர்களும் விசேட குறிப்புரை கூறினர். பிற்பகல் 5 மணிவரையில் கூட்டம் சமாப்தியாயிற்று. 7-ம்௳ சனிக்கிழமை முந்தைநாட் போலவே வித்தியாதரிசி ஸ்ரீ எஸ். கந்தையா அக்கிராசனத்தமர்ந்தனர். ஏறக்குறைய 300 ஆசிரியர்கள் சமுகமளித்தனர்.

நெல்லியடி ஸ்ரீ துரையப்பா உபாத்தியாயரவர்கள் டிறில் நடத்திக்காட்டினர். நெல்லியடி ஸ்ரீ கணபதிப்பிள்ளை உபாத்தியாயரவர்கள் 3-ம்வகுப்பிற்கு இராப்பகல்என்றவிஷயத்தைப் பற்றியும், புலோலிமேற்கு ஸ்ரீ ஆழ்வாப்பிள்ளை உபாத்தியாயரவர்கள் 2-ம் வகுப்பிற்கு வாசிப்பும் சம்பாஷணையும் என்ற விஷயத்தைப்பற்றியும் படிப்பித்துக்காட்டினர். மிஸ்டர். கிளாறென்ஸ் வைரமுத்து அவர்களால் தண்டனையும் பிரதிபலனும் என்பதைப்பற்றி ஓர் வியாசம் வாசிக்கப்பட்டது. ஒவ்வோர் விஷயங்களைப் பற்றியும் சிலஆசிரியர்களாலும் வித்தியாதரிசி பிரமஸ்ரீ. தி. சதாசிவஐயர், ஸ்ரீ டீ. கே. பொன்னையா அவர்களாலும், அக்கிராசனராலும் விசேட குறிப்புக்கள் கூறப்பட்டன.

பின்னர் ஸ்ரீ ச. சிவபாதசுந்தரம்பிள்ளை பீ. ஏ. அவர்கள் "தமிழ் இலக்கியக்கல்வி" என்ற விஷயத்தைப்பற்றித் தர்க்கரீதியாக அரியஉபந்நியாசஞ் செய்தனர். இத்துடன் 12½ மணியளவில் கூட்டம் சமாப்தியாயிற்று.

கடித.

## இந்திய சமாசாரம்.

### சைவசமயப் பிரவேசம்.

சென்ற ஏப்பிரல் மே மாதங்களில் பம்பாயில் டகமதியர்களும் கிறிஸ்தவர்களுமாக 481 பேர் சைவசமயப்பிரவேசஞ் செய்தனர்.

### திருச்செந்தூருக்குச் சமீபத்தில் முத்துச்சிப்பி.

அத்துக்குடியையும் திருச்செந்தூரையும்அடுத்த கடலில் சோதனைசெய்தபோது முத்துச்சிப்பிகள் ஏராளமாகத் தோன்றியிருப்பதாகவும் 1926 ம் வருஷம் மார்ச்மாதத்தில்முத்துக் குளிக்கலாமென்றும் அதிகாரிகள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

### மதுரைத்தமிழ்ச்சங்கம்.

இச்சங்கத்தின் 23 ம் வருடக் கொண்டாட்டம் இந்த ஆனி௴ 12௳ (25-6-24) புதன்கிழமை பின்பகல் 4½ மணி வரையில் சேதுபதி ஹைஸ்கூல் மண்டபத்திலே நடைபெறும். அத்தருணம் சென்னை வித்தியா இலாகா மந்திரி ஸோர் பரசுராமதாஸ்பாத்ரோ அவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள்.

### தீர்ப்புக்கு மேல் தீர்ப்பு.

ஒட்வியர் நாயர் வழக்கை விசாரித்த நீதிபதி விசாரணை முழுமையிலும் ஸோர் மைக்கல் ஓட்வியருக்கு வக்கீல்போல் நடந்துகொண்டதுடன் இந்தியா மந்திரியால் ஒருவாறு தண்டனையடைந்த ஜெனறல் டயருங் குற்றமற்றவரென்றும், அவரை இந்தியா மந்திரி தண்டனை செய்தது தவறென்றும் கூறியிருக்கிறார். மந்திரியின் தீர்ப்புக்கு மேல் தீர்ப்புச் சொல்லும் இந்த மதிநுக நீதிபதியின் நீதிவாதம் வியக்கற்பாலது.

லோ. ப. ரி.

### உயிருடன் தீக்கிரையாயினர்.

டெல்லியில் சாகரன்பூர் ஜில்லாவிலுள்ள ஜாமல்பூரில் ஒருவிபத்து ஏற்பட்டதால் சுமார் 200 குடிகளும் சில வீடுகளும் எரிந்துபோய் விட்டனவென்றும், அதில் 6 மனிதர்களும் சில குழந்தைகளும் நெருப்புக்கிரையாயினரென்றும் சமாசாரம்எட்டுகிறது. அதில் ஒருவரின் நிலைமை மிகவும் அபாயகரமாகவிருக்கின்றது. வீடுவாசல்களை இழந்தவர்களுக்கு உதவிபுரிவதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த விபத்தால் முகம்மதியர்களுக்கு பெரிதும் நஷ்டம் ஏற்பட்டது.

## கடிதம்.

### திரிமூர்த்தி விளக்கம்.

ஒருவயிற்றும் பிறவாது பிறந்தருளி
யுலகொடுக்குர்
திருவயிற்ற தொருகுழவி
திருநாமம் பரவுதுமே.

மக்கள் பண்டைநாளிலிருந்தே தங்களினும் மேலான ஒரு பொருளிருக்கிறதெனக் கருதி அப்பொருளை வழிபட்டு வரும் இயல் புடையராயிருக்கின்றார்கள். எந்தப் பொருள் மனிதர்களுடைய ஆன்ம உணர்ச்சியை எழுப்பி விட்டு அவர்களைச் சிந்திக்கும் படியும், நன் மார்க்கத்தில் ஒழுகும் படியும், செய்கிறதோ; எந்தப் பொருள் ஒவ்வொருவருடைய மனோபாவக உணர்ச்சிக்கு ஒவ்வொரு விதமாய்த் தோன்றி அவர்கள் ஒவ்வொருவரும் தாந் தாம் கொண்டதே உண்மையென மருண்டு தம்முள் போரியற்றி நிற்கத் தான் மாத்திரம் சாட்சி மாத்திரையாய்த் துலங்குகின்றதோ எந்தப் பொருள் அலருபமாய் அதிர்ந்திடுதற்கும் சூக்ம ரூபமாய் உணர்ந்திடு தற்கும் வலாதவாறு இரண்டு மற்ற நிலையிலிருந்து கொண்டு ஒரு சிலர் உருவம் என்றுவழக்கிடுதற்கும் வேறு சிலர் அருவம் என்று வாதிடுவதற்கும் இடந்தந்து நிற்கின்றதோ எந்தப் பொருள் எல்லா ஆற்றலும் எல்லா அறிவும் நிரம்பியதாய் உலகத்தோடு கலந்து அதனை அசைவித்து உயிர்களோடு கலந்து அவைகளை அறிவித்தும் வருகின்றதோ அந்தப் பொருளே மேலான பொருளொன்று மக்களாற் கருதப்படும் பொருளாம். அதுவே கடவுளென்று அழைக்கப்படும் பரம் பொருளாம்.

இனி இந்தக் கடவுள் என்னும் செம்பொருள் ஒன்றா அல்லது பலவா எனின் ஒன்றேயாம். பலவென்று கூறலாகாதோ வெனின் ஆகாது. ஏனெனில் ஒன்றுக்கு மேல் இரண்டு பொருள் இருப்பின் ஒன்றைவிட மற்றொன்று ஆற்றல் மிகுந்ததாயிருக்கும். ஆற்றல் மிகுந்த பொருளால் மற்றொரு பொருள் தாழ் வெய்து மாதலால் அப்பொருள் கடவுளென்று அழைக்கப்படுதற்குச் சிறிதும் உரியதன்றாம். ஏனெனில் எல்லா அறிவும் எல்லா ஞானமும் எல்லா இன்பமும் எல்லா ஆற்றலும் ஒருங்கே வாய்க்கப்பெற்றதாய்த் தான் மாத்திரம் ஒன்றனுள் அடங்காமல் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டு நிற்கும் பொருள் கடவுள் எனப் பெயர் பெறுமே தவிர ஏனையபொருள்கள் அப்பெயர் பெறுதற்கு உரியவாகா. இரண்டு பொருள்கள் எல்லாவகையினும் தம்முளொத்த தன்மையனவாகக் காணப்படுதலில்லை, என்பது தருக்க நூற்றுணிபு, தற்கால பூத பௌதிகசாஸ்திரங்களாற் அறுதியிடப்பட்ட உண்மை. ஆகவே இரண்டு கடவுள் உண்டென வைத்துக் கொள்வோமாகில் ஒன்றைவிட மற்றொன்று ஆற்றல் மிகுந்ததெனக் கொள்ள நேரிடும். அங்ஙனம் நேர்ந்திடின் ஆற்றல் மிகுந்தது கடவுள் என்றும் மற்றொரு கடவுள் அன்றென்றும் முடிவுசெய்திடுதல் வேண்டும். இரண்டும் சமமான ஆற்றல் உடையதென்று வைத்துக் கொண்ட போதிலும் "ஒன்றினால் ஆகக் கூடிய காரியந்தானே மற்றொன்றாலும் ஆகமுடியும்"? இதற்கு இரண்டு எதற்காக? என்று கேட்பார்க்குத்தக்க விடை யிறுக்க முடியாமல் தயங்க நேரிடும். ஆகவே கடவுள் ஒன்று என்று கொள்ளலே நேரிய பொருத்தமான வழியாகும்.

அங்ஙனமாயின் சைவர்களாகிய நம்முடைய மத நூல்களில் பிரமா விஷ்ணு உருத்திரன் என்னும் மூன்று கடவுளர்களைப் பற்றிய வெளியீடுகள் காணப்படுவதின் காரணம் யாது? சிருட்டித் தொழிலாகிய படைத்தலை நான் முகனும் திதித் தொழிலாகிய காத்தலை நாராயணனும் சங்காரத் தொழிலாகிய அழித்தலை உருத்திரனும் முறையே இயற்றி வருகின்றார்கள் என்று புராணங்கள் கூறுகின்றனவே? அங்ஙனம்கூறுவதற்குக் காரணம் என்ன? மூன்றும் ஒரே கடவுளாக ஒன்றாயின் மூன்று பெயர்கள் எதற்காக? மூவருமின் ஒரே கடவுள் தான் உண்டெனக் கூறும் கொள்கை யாங்ஙனம் பொருந்தும்? என்னும் இவை போன்ற பல ஆசங்கைகளை ஒருவாறு நீக்குவான் பொருட்டே பல மேதாவிகளது உடன்பாட்டினையும் அனுசரித்து இவ்வியாசம் எழுதப்படுகிற தென்பது.

நமது கட்புலனுக்குக் காணப்படுகின்ற இந் நில வுலகத்தில் இரண்டு விதமான சக்திகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவையாவன: அறிவுள்ள சேதனப் பொருளின் இயக்கம் ஒன்று. அறிவற்ற அசேதனப்பொருளின் இயக்கம் மற்றொன்று. அறிவுள்ள சேதனப் பொருளின் இயக்கத்தைச் சிற்சக்தி யென்றும் அறிவற்ற அசேதனப் பொருளின் இயக்கத்தைச் சடசக்தி என்றும் ஆன்றோர்வழங்குவர். இவை முறையே புருஷன் என்றும் பிரகிருதி யென்றும் சொல்லப்படும். இவைகளை மேனாட்டுத் தத்துவ சாஸ்திரிகள் முறையே Intelligent Active Force என்றும் Blind passive force என்றும் கூறுவர் என்ப. இந்த இரண்டு சக்திகளின் இயக்கம் இல்லாவிடின் இவ்வுலகில் ஒன்றுமே நடைபெற வியலாது. இவ்விரண்டு விதமான சக்திகளுள் முதலில் சடசக்தியை நாம் எடுத்துக்கொள்வோம். சடப் பொருளாகிய இப்பிரபஞ்சம் மூன்று விதமான நிலைகளை உடையதாக விருக்கின்றது. அவையாவன:— 1. ஸ்தூலநிலை. 2 சூக்கும நிலை. 3. காரணநிலை. நம்முடைய கட்புலனுக்குப் பலவித பேதங்களாய் கனபதார்த்தமெனும் ஸ்தூலாகாரமாய் காணப்படும்பிரபஞ்சம் இச்சமயம் எந்தநிலையிலிருக்கிறதோ அந்நிலையே ஸ்தூல நிலையாம். இந்த நிலையின் ஒழுக்கமே சூக்கும நிலையாம். மாயையில் ஒடுங்கி நிற்கும் நிலையே காரண நிலையாம். சைவசித்தாந்த முறைப்படி பரமாணுக்களினும் நுண்ணிதாயுள்ள சட வஸ்துவே மாயையென்று சொல்லப்படும். சடசக்தியாகிய பிரகிருதியும் சிற்சக்தியாகிய புருடனும் ஒன்றோடொன்று கலப்புறுவதனாலேயே பிரபஞ்சம் தோன்றி, நின்று அழிகின்றது. (வரும்)

செ. வை. செல்லையா.
வல்லைநகர்.

## "ஆங்கிலங்கற்கும் யாழ்ப்பாணத்து மாணவர்களுக்கு ஓர் தன்மதி."

(முற்றொடர்)

பிள்ளையைப்பெற்ற மாதாவுக்கே தான் கருவுற்ற திங்கள் தொடங்கிப் பிள்ளைப்பயந்த நாள்வரையும் அடைந்த வருத்தம் இத்தனையென்பது நன்கு தெரியும். பிள்ளையைப்பெறாத மாதர்களுக்கு அவ்வருத் தத்தைப்பற்றி எத்துணை சொல்லினும் அவை நன்கு புலப்படா. அதுபோலவேதேயிலைறப்பர்த்தோட்டங்களில் உத்தியோகஞ் செய்பவர்களுக்கே அந்த உத்தியோகங்களால் வருஞ் சிரமம் பெரிதும் விளங்கும். இந்த உத்தியோகங்களைப் பற்றிச் சற்றுமறியாத உங்களுக்கு அதனால் வரும் சிரமத்தைப்பற்றிச் சிறிதேனும் தெரியவராது. ஆனமைபற்றி இதைக்குறித்து உங்களுக்குச் சில சொல்லத் துணிந்தேன்.

றப்பர் தேயிலை பாகஞ் செய்பவர்கள் (Tea and Rubber makers) அடையுஞ் சிரமத்தைப் போலவே, றப்பர் தேயிலைகளை மலைகளில் உண்டாக்கித் தேயிலைக் கொழுந்து பறித்தல் றப்பர்ப்பால் எடுத்தல் ஆகியகருமங்களைச் செய்வதற்கு அமைக்கப்படும் உத்தியோகத்தவர்களும் (Conductors) அடைதல் வேண்டும். ஆனால் இவர்கள் காலை ஆறுமணி தொடக்கம் மாலை ஆறுமணி வரையுமே, கடமை செலுத்த வேண்டியவர்களாவார்கள். அங்ஙனமாயினும் இவர்கள் மழை வெயில் என்றபேதம்பாராது நனைதலும் காய்தலுமாய சிரமங்களையடைதல் வேண்டும். இவர்கள் மலைகளிற் கருமம் பார்க்கும்

பொழுது அட்டைகடியும் அரிய வழிநடையுங் கட்டைகிடாவுதலுமாய் பிறருன்பங்களை யடைதலும் வேண்டும். கருக்கிக் கூறின் பத்திரிகை விளம்பரங்களில் தேயிலை றப்பர்த் தோட்டக் காட்டு உத்தியோகங்களுக்கு ஒவ்வொருவருக்கு ஒரு மாத வேதனம் ஐம்பத்தைந்து அல்லது அறுபது ரூபா வென்று குறிக்கப்பட்டிருந்தால் அது இரண்டுமாத வேதனமென்றே புத்தி பண்ணிக்கொள்ளுதல் வேண்டும். எற்றுக் கெனில் அவ்வுத்தியோகங்களுக்குப் பகல் பன்னிரண்டு மணித்தியாலம் கருமம் பார்ப்பதுபோலவே இரவிலும் பத்து மணித்தியாலங்களுக்குக் குறையாமற் கருமம் பார்க்க வேண்டும். அப்போது அறுபது நாட்களே ஒரு மாதமாகும்.

அந்தோ! என் அன்பு நிறைந்த மாணவர்களே! தோட்டக்காட்டு உத்தியோகத்தவர்கள் படும்பாட்டை நான் என்னென்று சொல்லுவேன்.

தோட்டக்காட்டு உத்தியோகத் தவர்கள் உண்ண உடுக்கத்தானுஞ் சிறிது நேரமின்றிக் கருமம் பண்ணல் வேண்டும்.

இவர்களுள்ளும் தேயிலை றப்பர் பாகஞ்செய்யும் உத்தியோகத்தவர்களுக்கு (Tea and Rubber makers) உதவி உத்தியோகத்தவர்களாகக் கடமை பார்க்கச் செல்பவர்கள் (Assistant Tea and Rubber makers) படும்பாடு (சிவா சிவா கதிர்காமத்தையனே!) இத்தன்மையென்று உங்களுக்கு எடுத்துரைக்க எம்மால் முடியாது. இவர்களுக்கு இதுவே ஒரு பெரிய நரகக்குழி யென்று சொல்லலாம். தலைமை உத்தியோகத்தவர்கள் (Head Tea and Rubber-Makers) தங்கள் கடமைகள் அனைத்தையும் தமக்கு உதவியாகக் கடமை பார்ப்பவர்களிடம் (Assistant Tea and Rubber-Makers) ஒப்பித்துவிட்டுத் தாம் சிறிதும் இரக்க மின்றி நிறைமதிபோற் குறைவிலா நித்திரை செய்வார்கள். பின் உதவி உத்தியோகத்தவர்கள் அடையும் தாங்கொணுச் சிரமத்தைப் பற்றிக்கூற புல்லறிவினையுடைய யான் வல்லுனனல்லேன். அந்தோ! இவர்கள்,

"மெய்வருத்தம்பாரார், பசிநோக்கார், கண்டுஞ்சார், எவ்வெவர்தீமையுமேற்கொள்ளார்,— செவ்வி, அருமையும்பாரார், அவமதிப்புங் கொள்ளார், கருமமேகண்ணுயினர்," என்ற செய்யுளுக்கேற்ப இரவு பகலென்ற பேதமின்றிக் கருமம் பார்த்தல் வேண்டும்.

தேயிலை, றப்பர்த்தோட்டக்காட்டுஉத்தியோகங்களுக்கு ஒரு மாத வேதனம் ஆயிரம் ரூபாவாலும் அன்பர்களே! அதனை ஒரு போதும் விரும்பவேண்டாம், விரும்பவேண்டாம். கடவுள் இருபத்து நான்கு மணித்தியாலங் கொண்ட ஒரு நாளிற் பாதியைப் பகலாகவும் பாதியை இரவாகவும் அமைத்து விட்டனர். அங்ஙனம் அவர் செய்தது எக்காரணம்பற்றி?

பகல் முழுவதும் சிரமப்படும் சீவகோடிகள் இரவு முழுவதும் ஆறுதல் அடைய வேண்டுமென்ற நியாயம் பற்றியேயாம். இதனை விடுத்திரவு பகலென்ற பேதம் சற்று மின்றிச்சகடக் கால்போற் சுழன்று சுழன்று, எம்சுகத்தைச் சிறிதும் கவனியாது கருமம் பார்த்து உழைக்குங்காசு எதற்காக? அங்ஙனம் நாம்பாடுபட்டு உழைக்கும் பணத்தில் ஒரு இம்மியேனும் நாம் இறந்த காலை எமக்குப் பின் வருமா? இல்லையே! ஆனதால் அன்பு நிறைந்தமாணவர்களே! நாம் எம்முடைய சுகாதாரத்தைச் சிறிதேனும் கவனித்து வருதல் வேண்டும்.

மீட்டும் மீட்டும், தோட்டக்காட்டுஉத்தியோகம் ஒரு பெரிய பூவுலக நரகக்குழி என்பதை உங்களுக்கு நன்கு தென்படச் செய்கின்றேன்.

இன்னும் தேயிலை றப்பர்த்தோட்டங்களிலே வேலை செய்பவர்கள் பெரும் பான்மையும் இந்திய கூலியர்களாவார்கள். இவர்களைக்கொண்டு தோட்டக்காட்டு வேலைகளைத் திறம் பாறுசெய்விப்ப தென்றால் கல்லில் நார் உரிப்பது போலாகும். இவர்கள் தற்கால நாகரிகம் பெரிதும் படைத்தவர்களாய்த் தங்களுக்குத் தலைவராயுள்ளோர்க்குக் கீழ்ப்படிதல் சிறிதுமில்லாதவர்களாய் விட்டனர்.

அந்தோ! அன்புடையமாணவர்களே!

இதைப்பற்றி ஈண்டு விரிக்கிற் பெருகுமாதலின் இத்துடன் விடுக்கின்றேன்.

அப்பால் யான் உங்களை அன்புடன் வேண்டிக்கொள்வது யாதெனில், நீங்களனைவரும் ஆங்கிலக் கல்வியைக் குறைவில்லாது நிறைவாகக் கற்று உயர்ந்த உத்தியோகங்களை யடைய நன்கு முயல வேண்டுமென்பதாம். ஆனால் நீங்கள் தேயிலை றப்பர்த் தோட்டங்களிலுள்ள உத்தியோகங்களைச் செய்ய வேண்டு மென்று கனவிலும் (ஒருபோதும்) நினையாதீர்கள், நினையாதீர்கள். இது என்னுடைய (ஏழுவருடத்து) முற்றிப்பழுத்த முழு அனுபவமாகும். இக்கட்டுரையை உங்கள் மீது கொண்ட அன்பின் நிமித்தம் வரைந்தேனொழிந்து வேறு எவர் மீதேனும் துரோகம் பற்றியன்றும் என்பதை நன்கு அறிந்து கொள்வீர்களாக.

உங்கள் நாடு சிறக்கக் கருணையங்கடலாகிய முருகக்கடவுளின திருவடிகளை யன்புடன் இறைஞ்சுகின்றேன். சுபம்.

இங்ஙனம்,
க. சரவணமுத்து.
நவாலி வடக்கு.

## வித்தியாகந்தோர்ச் சுற்று நிருபங்கள்.

பத்திரிகாசிரியரவர்கட்கு:

ஐயா!

தமிழ்ப் பாடசாலை ஆசிரியர் பலர் ரோருசிகளிலும் கடிதங்களிலும் தம் கையொப்பத்தை ஆங்கிலத்திலிட்டுத் தமக்கும் சிறிது ஆங்கில அறிவு உண்டென்பதைப் பிறர்க்கும் புலப்படுத்தப் பிரயாசப்படுகின்றனர். இவர்கள் வித்தியாபகுதியார்க் கெழுதுங் கடிதங்கள் "Honoured Head teacher" Sir, என்று தொடங்கி "I am your obedient Servant" என்று முடிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அரசினர் பாடசாலை ஆசிரியர்களிடத்திலே இவ்வழக்கம் வேருன்றியிருக்கிறது. தமிழ் ஆசிரியர்களாக வுள்ளவர்களே தம் கையொப்பத்தைத் தமிழிலிடுவதற்கு அருவருப்புடையராயின் இவர்களின் பாஷாபிமானத்தைக்குறித் தென்சொல்வோம். இவர்களின் முன்மாதிரியால் விளையுங் கேடெத்துணைத்தெனக் கூறுவேம்.

இவ்வழக்கத்தால் நம் ஆசிரியர்கள் ஆங்கில அறிவுடையாரெனப் பலரும் மயங்குவதற்கிடமாகின்றது. இவர்களுக்கு வித்தியாதரிசியார் எழுதுங் கடிதமும் ஆங்கிலத்திற்றுன்; பகுதிப் பாடசாலைச்சங்க (D. S. C.) த்தார் எழுதுங் கடிதங்களும் ஆங்கிலத்திற்றுன்; (Log Book) 'லொக் புக்'கில் எவர் பாடசாலையைச் சந்தித்த போதெழுதுகிலும் ஆங்கிலத்திற்றுன்; வித்தியாகந்தோரால் விடப்படும் சுற்றுநிருபங்களும் ஆங்கிலத்திற்றுன். என்னே பரிதாபம்! இவற்றை விளங்கிக்கொள்ளும் ஆற்றலின்றி இடர்ப்படும் நம் ஆசிரியர்மாட்டெவர்தான் இரக்கங் காட்டார்.

மாட்சிமை தங்கிய யோட்ஸ் மன்னரின் பிறந்த தினக் கொண்டாட்டத்தைக் குறித்து அரசினர் பாடசாலைகளுக்கு B' 6 இலக்கமுடைய ஒரு சுற்று நிருபம் விடப்பட்டிருந்தது. இதன் சாரம் விளங்கிக்கொள்ளாத ஆசிரியர்கள் ஆனி 3உ பிரசித்த விடுதலைநாளென்று பிள்ளைகட்கறிவித்துவிட்டுத் தம் வீடு போய்விட்டனர். சிலர்முந்தியதிங்கட்கிழமையும்'லீவு' பெற்றுக்கொண்டு வெள்ளிக்கிழமையே வீடு போய்விட்டனர். அப்படியாயின் சுற்று நிருபத்தின் பயன் என்ன? அதற்குண்டான மதிப்பென்னை? அரசினர் பாடசாலைகளில் இராசா பிறந்த தினக்கொண்டாட்டம் எவ்வாறு நடத்தப்பட்டது? இராச விசுவாசம் அன்றையத் தினம் பிள்ளைகட்கு எவரால் போதிக்கப்பட்டது. அரசினர் பாடசாலை ஆசிரியர்களே இவ்விஷயத்தில் நன்முன்மாதிரி காட்டிகளாக விளங்கவேண்டிய தவசியம். உதவிநன்கொடைப் பாடசாலைகளில் இராசா பிறந்த தினக் கொண்டாட்டம் விமரிசையாக நடைபெறும் பொழுது அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியர்கள் பலர் தம் வீடுகளில் தூங்குகின்றனர்.

வித்தியாபகுதியார், பகுதிப் பாடசாலைச் சங்கத்தார் மூலமாக ஒவ்வோரிடத்து விதானை, உடையார், தபாற்கந்தோரார், ஆஸ்பத்திரியார் மற்றும் அவ்விடத்துப் பெருமக்கள் ஆகியவர்களிடத்து விசாரித்து எந்தெந்த அரசினர் பாடசாலைகளில் இக்கொண்டாட்டம் நடத்தப்பட்டது என்று அறிந்து அவ்வாறு நடத்தப்படாத பாடசாலைத் தலைமை உபாத்திமார் அன்றையத்தினம் எவ்விடத்திருந்தார்களென்றும் அறிந்து, இவ்விசேஷ தினம் தக்க பிரகாரம் கொண்டாடப்படாததற்குக் காரணத்தை உத்தேசித்து இனியாகிலும் தாம் விடும் சுற்று நிருபங்களைத் தமிழிலும் விடுவார்களாக. அரசினர் பாடசாலை ஆசிரியர்கட்குப் பிறர் அனுப்பும் கடிதங்களையும் தமிழில் வரைவார்களாக.

இங்ஙனம்,
தமிழ்மொழியாளன்.

8-6-24.

## அறிவிப்பு.
### கதிர்காம யாத்திரிகருக்கு மோட்டர் பிரயாண வசதி.

ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரத்திற்கு அப்புத்தளை றெயில்வே ஸ்ரேஷனிலிருந்து கொஸ்லாந்தை மார்க்கமாகச் செல்லும் பாதை இற்றைக்கு முன் மிகவுங் கஷ்டமாக விருந்தது. இப்போ அப்புத்தளையிலிருந்து நிசமாறு மைக்கோ அல்லது புத்தலைக்கோ குறைந்த கூலிக்குப் பல மோட்டோர் பஸ் விடவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இது சிறுவர் மாதர் வயோதிகர் செல்வதற்கு மிகவும் வசதியாகும். இப்போது யாத்திரை செய்பவர்களுக்கு அப்புத்தளை றெயில்வே ஸ்ரேஷனில் இறங்கி வசதியாக ஐந்நூறு பெயர் வரையில் தங்குவதற்கு ஒரு மண்டபமும் போசனசாலையும் நியமிக்கப்பட்டிருக்கின்றது.

இவைகளை நடப்பித்தற்கு ஸ்ரீ தா. முருகேசு உபாத்தியாயர் மானேஜராக விருக்கின்றார். தேவையான வசதிகளுக்கு முன்னமே அடியிற் காணப்படும் விலாசத்திற்குத் தெரிவித்தால் அவர் அதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வார்.

விலாசம்:
மானேஜர்,
கொஸ்லாந்தை மோட்டர் சேவிஸ்,
கொஸ்லாந்தை.

28-5-24.
கொஸ்லாந்தை.
(Mis 496)


இனும்! இனும்!! இனும்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனுமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

# சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையேன்று ரூபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமயாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினால் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனுமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு | விலை | ரூபா | | 10—0—0 |
| 20 ,, | 40 | ,, | ,, | ,, | ,, | 5—0—0 |
| 10 ,, | 20 | ,, | ,, | ,, | ,, | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினுல் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்:

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு ஜில்லா)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt. (INDIA.)

(H. 27.)



4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன.
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.
ரிஜிஸ்டர் செய்யப்பட்டது
அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்ற
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

# தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினால் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.
உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினால் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினால் பொறுக்கமுடியாத கைகால் குடைச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணாகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, முதிமொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நரைச்சல், மேகஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுத்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 திராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, சுந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறுதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
R. M. K. வேலுசாமிபிள்ளை,
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.

(Y. 31.)


வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.